ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

पत्या सहैक्यं गृहकर्मकौशलं सद्वृत्तमार्येषु सुसंविनीतम् ।
पण्यस्य सम्भारमपत्यवर्धनं कुटुम्बचिन्तैवमुशन्ति योषिताम् ॥

தம் கணவனிடம் அன்புபாராட்டி அவனிஷ்டம்போல் அநுசரித்திருப்பது, வீட்டுக்காரியங்களை அவ்வப்பொழுது நன்கு கவனித்துச் செய்தல், சாஸ்திரங்களாலும் சான்றோர்களாலும் புகழக்கூடியநல்லொழுக்கமும், பூஜ்யர்களான பெரியோர்களிடத்தில் வணக்கமும், மரியாதையுடனிருப்பதும், இல்லத்திற்கு வேண்டிய உணவுப்பொருள்களை அவ்வக் காலத்தில் ஜாக்கிரதையாய்ச் சேகரித்தல், தம் குழந்தைகளைப் பாதுகாத்து வளர்த்தல், முதலிய இவ்விதகாரியங்களை நடத்தும் ஸ்திரீகள்தான் குடும்பகார்யங்களை நன்முய்ச் சிந்திக்க அருகர்களென்று அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

குடும்பம் நன்முய்ப் பரிபாலிக்கப்பட்டு விருத்தியடைய வேண்டுமானல், அதற்குப் பெண்டீர்களே முக்ய காரணமாகக் கூறப்படுகிறார்கள். புருஷர்கள் எவ்வளவு புத்திமான்களாயிருந்தாலும், வீட்டிற்குள் ஆகவேண்டிய பாகம் முதலான கர்மாக்களைச் செய்வதற்கு ஸ்திரீகளே அருகர்களாகிறார்கள். இக் கருத்தைக் கொண்டுதான் அவர்களுக்கு வடமொழியில் **गृहिणी** என்றும், தென்மொழியில் இல்லாள் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் தங்களுக்குறிய கடமைகளை நடத்தி வந்தார்களாகில், கிரகஸ்தாசிரமமே மிகச் சிறந்ததாகும்.

गृहाश्रमात्परो नास्ति यदि भार्या वशानुगा ।

இல்லாள் கணவன் நோக்கத்திற்கிணங்கி வீட்டு வேலைகளைச் சரியாய் கவனித்துவந்தால், கிரகஸ்தாசிரமத்தைக்காட்டிலும் வேறு சிறந்த ஆசிரமமில்லை என்று மனுவும் மொழிந்திருக்கிறார். ஆகையால், ஸ்திரீகள் தம் பதியின் கருத்தையநுசரித்து கிரககிருத்யங்களைச் சரியாய் நடத்திவந்தால் இவ்வுலகிலும், பரலோகத்திலும் சிரேயஸ்ஸை யடையலாம். சுபம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்,

வேதாந்தஸாரம்.

(69-வது பக்கத்தொடர்ச்சி)

அனுபந்த நிருபணப் பிரகாரணம்.

சாஸ்திரங்களுக்கு நான்கு அனுபந்தங்க ளிருக்கவேண்டும். வேதாந்தஸாரமென்று தன் பெயருக்குற்றவாறு வேதாந்தசாஸ்திரத்தின் ஸாரமான விஷயங்களைச் சுருக்கி வெளியிட முன்வரும் இந்தக் கிரந்தத்திற்கும் அனுபந்தங்கள் அவசியம் வேண்டும். வேதாந்த சாஸ்திர விஷயத்தை யறிவிக்கப்போகிறபடியால் அதற்குள்ள அனுபந்தங்களே இதற்குமெனக் கருதி, வேறாகக் கூறப்படவில்லை. அங்கு சொல்லப்பட்ட அனுபந்தம் என்கிற பதத்திற்கு அதிகாரி, விஷயம், பிரயோஜனம், ஸம்பந்தமென்று பொருள். அதாவது இந்தசாஸ்திரத்திற்கு அதிகாரி யார்? இதனாலறிவிக்கப்படும் விஷயம் என்ன? அந்த விஷயத்தை யறிந்துகொள்வதால் யாது பயன்? என்பது முதலான சங்கைகள் துவக்கத்தில் ஒருவனுக் கேற்படுமாகையால், அவைகளை விளக்கிக் காட்டாவிட்டால் சாஸ்திராத்தியயனத்தில் பிரவிருத்தியேற்படாது. ஆகையால் சாஸ்திராரம்பத்தில் அனுபந்தத்தை நிரூபித்து அதன் ஒரு பாகமான அதிகாரியின் லக்ஷணத்தை முந்திக் கூறி, பாக்கிகளையும் முறையே அறிவிக்கிறோம்.

சாஸ்திரத்தின் விதிவழுவாமல் முறையே சிறந்தகுருக்களின் மூலமாய் அத்யயனம் செய்யப்பட்ட வேதங்கள், அவைகளின் அங்கங்கள் இவைகளையுடையவனும், தன்னால் ஓதப்பட்ட வேத வேதாங்கங்களுடைய பொருளையு மற்பமறிந்தவனும், காம்யமான பலத்தைபளிக்கும் ஜோதிஷ்டோமம் முதலிய கர்மாக்களில்

பற்றுதலற்றவனும், நரகம் முதலான கொடிய துன்பங்களுக்குக் காரணமான பிராமணவதம் போன்ற நிஷித்த கர்மாக்களை யற்ப மேனு மறியாதவனும், செய்யாவிட்டால் தோஷமுண்டென்றும் அவச்யம் அனுஷ்டிக்கவேண்டுமென்றும் சாஸ்திரங்களால் கூறப் பட்ட நித்யங்களான ஸந்தியாவந்தனம் முதலிய கர்மாக்களையும், நைமித்திகமென்று கூறப்பட்ட ஜாதேஷ்டி முதலான கர்மாக்களை யும், பாபங்களைப் போக்கும் சக்திவாய்ந்த சாந்திராயணம் முத லிய பிராயச்சித்த கர்மாக்களையும், ஸகுணபிர்மவிஷயமாயும், மான ஸிக வியாபாரமாயுமுள்ள உபாஸனங்களையும், நன்கனுஷ்டித்து மிகவும் சுத்தமாய் களங்கமற்றிருக்கும் சித்தத்தையுடையவனும், நான்கு ஸாதனங்களுடன் கூடியவனுமான புருஷன் அதிகாரியாவான்.

ஸாதன சதுஷ்டய நிரூபணம்.

நான்குவித ஸாதனங்களாவன:—

(1) நித்யாநித்ய வஸ்துக்களின் விவேகம். (2) இம்மையிலும் மறுமையிலும் ஏற்படும் பலங்களில் விருப்பமின்மை. (3) சமம் முதலிய ஆறுகுணங்களின் பிராப்தி. (4) மோக்ஷத்தில் விருப்பம்; இவைகளே. நித்யாநித்யவஸ்து விவேகமென்றால், நித்யவஸ்து, அநித்யவஸ்து இவைகளின் அறிவு. அதாவது, முக்காலத்திலும் அழிவில்லாமல் எப்பொழுதும் விளங்கும் பிர்மமொன்றே நித்ய வஸ்துவென்றும், அதைக்காட்டிலும் வேறான மற்றயாவும் அநித் யங்கள் என்கிற பகுத்தறிவு என்று பொருள். இவ்விதமே,

ब्रह्मैव नित्यमन्यत्तु ह्यनित्यमिति वेदनम् ।
सोऽयं नित्यानित्यवस्तु विवेक इति कथ्यते ॥ आचार्याः

என்று ஸ்ரீ பரமாசார்யாளும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். நித்யமாகத் தோன்றும் இந்த ஜகத்தை அநித்யமாகக் கூறுகின் றீர்களே? அதெங்ஙனம் பொருந்துமென அக்ஞானத்தால் வின வும் சீடனுக்கு திருஷ்டாந்தமூலமாக அறிவிக்கிறார்.

मृदादिकारणन्नित्यं त्रिषु कालेषु दर्शनात् ।
घटाद्यनित्यं तत्कार्यं यतस्तन्नाश ईक्ष्यते ॥

ஒரு காரியமுண்டாகவேண்டுமானல், காரணமன்னியில் உண்டாகாது. ஆகையால் எவ்வித கார்யங்களும் காரணங்களுடன்கூடியதென்றே அங்கீகரிக்கவேண்டும். அப்படியங்கீகரித்தால் அவைகளில் காரணம் நித்யமென்றும், காரியம் யாவு மநித்யமென்றும் தெரிகின்றது. மண்ணையும் அதன் கார்யமான கடத்தையு மெடுத்துக்கொள்வோம். மிருத்தின் கார்யங்களான கடம், சராவம் முதலியவைகள் நாசத்தைபடைகின்றபடியால் அநித்தியமென்றும், கார்யங்கள் நாசத்தையடைந்தாலும் காரணபூதமான மிருத்து இருந்துகொண்டே இருக்கிறது. கடம், சராவம்முதலிய கார்யங்கள் நாசத்தையடைந்த பிறகும் அதற்கு மிருத்தென்கிற பெயர் போகாமலிருப்பதால் அதை நித்யமென்றுகூறுகிறோம். இன்னும் ஸுவர்ணத்தால் ஏற்படும் கடுக்கன், மோதிரம் முதலான கார்யங்களையும் காரணமான ஸுவர்ணத்தையும் பார்த்துக்கொள்ளலாம். இவ்விதம் கார்யமான ஜகத்திற்கும் ஒரு காரணமிருந்தே தீரவேண்டும். அதுவும் பல மதஸ்தர்களால் வெவ்வேறுகக் கருதப்பட்டாலும், அநாதியாயுள்ள சுருதிகளைப் பிரமாணமாகக்கொண்டு கூறும் ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யாள் மதத்தில் பிர்மம்தான் ஜகத்காரணமாகின்றது. அப்படியானல், ஜகத் கார்யமென்றும், அதற்குப்பிர்மம் காரணமென்று மேற்பட்டது.

तथैवैतज्जगत्सर्वमनित्यं ब्रह्मकार्यतः ।
तत्कारणं परंब्रह्म भवेन्नित्यं मृदादिवत् ॥ श्रीशङ्कराचार्याः ।

கீழ் காட்டிய திருஷ்டாந்தப்படி கார்யமான நமக்குப் பிரத்தியக்ஷத்தில் தென்படும் இந்த ஜகத் யாவும் நாசத்தையடையக்கூடியது. ஆகையால் அநித்யமென்றும், இதற்குக் காரணமாய் விளங்கும் பிர்மம் ஒன்றுதான் நித்யமென்றும் நன்கு அறிந்து கொள்ளவேண்டும். இவ்வித மறிந்துகொள்வதற்குத்தான் நித்யாநித்ய விவேகமென்று பெயர்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

द्वितीयः पल्लवः = இரண்டாவது துளிர்.

तरुणिमाऽस्थिरः = இளமை நிலையாமை.

जरा पिशाचिकाऽऽगच्छेदिति धीरा विविच्य हि ।
व्युत्थाय दण्डं दधते दुःख्यन्ति त्वितरेऽमुना ॥ १ ॥

கிழத்தனமென்னும் பிசாசு வந்து பிடித்துக் கொள்ளு மென்று அறிஞர் ஆராய்ந்து, (பிறண்டெழுந்த புரவிபோல) உலகப்பற்றை உதரித்தள்ளி, (இந்த்ரியநிக்ரஹம்) = ஐம்புல வடக்கமெனும் தண்டத்தை தரிக்கின்றனர்; ஏனையரோ [தரையில் சடலம் சாயும்வரை] கழியூன்றி கஷ்டப்படுகின்றனர்-என்றவாறு [1]

बन्धुता विगता धात्र्यः पुत्रस्नेहविवर्जिताः ।
मज्जत्पोते व(इव) रुदितमुदितं विमृश स्वयम् ॥२॥

[உயிர் நீங்கும்பொழுது] உறவினர் மெல்லச்சென்று விடுகின்றனர்; தாய்மார்களோ, பெண், பிள்ளை, இவர்களிடமுள்ள அன்பை விட்டு விடுகின்றனர்; [அத்தருணம்] மூழ்குந்தோணியிற்போல் நிகழும் அழுகுறலைத்தாம் ஆராய்மின். [2]

स्खलद्वचा दण्डधारी निर्दन्तः प्रस्खलद्गतिः ।
अन्यावधीरणान्तं यो भोगेप्सुस्तस्य कं न हि ॥३॥

தழதழத்த வார்த்தையும் தடியூன்றியும், பற்களின்றியும், இடறும் நடையுமுள்ள யாவன், பிறர்திரஸ்கரிக்கும்வரை சிற்றின்பப் பற்றுள்ளோனோ, அன்னவனுக்கு ஸுகங்கிடையா. [3]

मात्रा धृतचरं दण्डं धृत्वा वक्रशरीरिणीम् ।
चलच्छीर्षां चापि योषां य इच्छेत्तस्य कं कुतः? ॥४॥

தாயூன்றி நடந்த தடிதரித்து, கூனிய கூறுள்ளாளும், அசையுஞ் சிரஸுள்ளாளுமாய மங்கையை இச்சிப்போனுக்கு இன்பமேது?

मन्माता मां प्रसूयाऽयान्मात्रन्तरसुकाङ्क्षिणी ।
ययौ तथैव तन्माता दरिद्रन्मातृगं जगत् ॥ ५ ॥

என் தாய் என்னையீன்று வேறன்னையை விரும்பிச் சென்றாள்; அவள்தாயும் அங்ஙனமே; இவ்விதம், தாயையணுகி யேகுமுலகு வறுமையில் வருந்துகின்றது. [5]

उपहर्तृकरावर्तिमालापल्लवखादिनः ।
अजस्येव परानन्दः प्राज्ञस्य न हि यौवने ॥ ६ ॥

தேவதைக்கு இட்டுக்கொடுப்பவன் கையில் பிறளும் மாலையிலுள் ளதுளிரைத் தின்னும் ஆட்டிற்கு எங்ஙனம் ஆனந்தங் கிடை யாவோ, அங்ஙனமே விவேகிக்கு யௌவனத்தில் மிகவானந்த மில்லையாம். [6]

यौवनं संस्रवत्येव फलिनस्य फलं यथा ।
मदिराक्षीति मा वामामिच्छ तुच्छं कलेबरम् ॥ ७ ॥

பரிபக்வமான பழங்களை ப்ராஜைகளுக்கு அளிக்கும் மரத் தின் பழம்போல தருணவயது சீக்கிரஞ் சென்று விடுகின்றது; ஆதலால், மங்கையரிடம் —'மோஹங் கொடுக்குங் கண்ணாள்' என்று, மயக்கங் கொள்ளாதே! எனெனில், இச்சடலம் மிகவும் துர்நாற்ற முற்றதே. [7]

गतं वयः कियत् ? दन्तबलं खाद्ये कथं न्विति ।
परैरामृश्यमानं न वपुः श्रद्दधते विदः ॥ ८ ॥

['தமக்குச்] சென்றவயதெத்தனை? பற்களின் பலம் தின்பண் டங்களில் எவ்விதம் இராநிற்கின்றது?' என்றெல்லாம் பிறரால் ஸ்பர்சித்து பரீக்ஷிக்கப்படும் உடலை, அறிஞர் ஆதரிக்கிறார்களில்லை.

प्रवाते वाति पक्वानि फलादीनि पतन्ति हि ।
वित्ते शयस्थे बालैरप्याचर्यं धर्ममन्वहम् ॥ ९ ॥

சுழல் காற்றடிக்கும் பொழுது, பழுத்த பழம் இலை முதலியன உதிர்ந்து விடுகின்றனவல்லவா? ஆதலின், கையில் பணமிருக்கும்

பொழுதே, [கொடுக்கவெண்ண முதித்தவுடனேயே] சிறுவரும் பெரியோரும் தினந்தோறும் இயன்ற அறத்தைச் செய்யவேண்டும், [உடலும் பணமும் நிலையற்றதாம்.]

अन्विष्यन्हि यमो मर्त्यं निर्दयं बम्भ्रमीत्यतः ।
धर्मं शम्भलमेवान्वक्शैशवे संचिनुष्व भोः ॥१०॥

[எச்சமயத்திலும்] மரிக்குமியற்கை வாய்ந்த மானிடனை மறலி, இரக்கமின்றி இழுத்துக் கொண்டுபோக மிகத்தேடித் திரிகின்றான்; ஆகையால் மானிடரே! [மாணுக்கரே] நீங்களெல்லோரும் இளமை முதலாகவே 'தர்மம்' எனும் கட்டுச்சாதத்தைத் தினந்தோறுஞ் சேகரித்து வைத்துக் கொள்ளுங்கள்; [இச்சாதம் நெடுநாள் சென்றாலும் சுவையில் குன்றாது; பசிவேளையில் கைக்கெட்டி, திருப்திசெய்து ஆனந்தமளிக்கும்.]

இரண்டாந்துளிர் முற்றும்.

(தொடரும்)

கே. ஏ. இராமலிங்கசாஸ்திரியள்,
'ஸம்ஸ்கிருத காமதேனு' பத்திராதிபர்,
கல்லிடைக்குறிச்சி

திரைகடலோடியுந் திரவியந்தேடு.

திடுக்கிடச்செய்யும் அலைகளால் கொந்தளிக்கும் ஆழிவழியாக கடல் யாத்திரைசெய்து, அயல்நாடடைந்தாவது, யாவற்றிற்கும் முக்ய ஸாதனமாம் தனத்தைச் சம்பாதி என்றார் ஔவையன்னையார். முற்காலத்தில், பணமில்லாமலே தான்யம், முதலிய பொருளாலேயே எவ்வித தர்மகார்யங்களும் குன்றாது நடைபெற்றது; இக்காலத்திலோ, எக்கார்யத்திற்கும் நாணய வாயிலாகவே வழி நிகழ்கின்றது; பணமில்லாத கணவனைப்பார்வையும் மதியாள்; திருடனும் பொருட் படுத்தான்; பணமே ப்ராணபாயத்தை நீக்கவும் பயக்கவும் உதவும்; பணம் என்றால்—பிணமும் வாயைத்திறக்கும்; பணமின்றி எத்திருவிழாவும், எத்திருமண

மும் கடாத்த இயலாது; பணமே பலகலைகளைப் பயிலவும் பரிச ளிக்கவும், பல கலாசாலைகளை யமைக்கவும், பத்ரிகைகள் ப்ரசுரஞ் செய்யவும் உதவுகின்றது.

இத்தகைய மகிமைவாய்ந்த திரவியத்திற்கே—திருமகளுக் கே—லக்ஷ்மீதேவிக்கே மனிதவர்க்கத்தார் தாஸர்களாம்; திரவி யம் எவருக்கும் தாஸராகாது; ஸ்ரீதேவி [தார்மிகனைத் தவிர்த்து] எவனுக்கும் கிங்கிரி [வேலைக்காரி] ஆகாள்,

अर्थस्य पुरुषो दासो दासस्त्वर्थो न कस्य चित् ।

என்று ஆன்றோர் அருளியிருக்கின்றனர். முற்சென்மத்திய புண்ய வசத்தால் இப்பிறப்பில் செல்வவந்தனுகிறான்; செல்வத் தால் தர்மஞ் செய்கிறான், தர்மத்தால் அர்த்தம் (செல்வம்) விரு த்தியடைகின்றது; அதனாலே இன்பம் ஸித்திக்கின்றது; இங்ஙு னமே இடைவிடாது அர்த்தத்தை விருத்திசெய்து கொண்டும், அதன் மூலமாக அறத்தையும் ஆர்ஜனஞ்செய்து கொண்டும் வந் தால், இவ்வறமே துறவிமார்க் கத்திலிறக்கி, குருவுபதேசங்கி டைக்க உதவி, தன்னந்தனிப் பெருமையாம் ஆதமானந்தமுய் யச் செய்யும்; ஆதலால் விடாமுயற்சி செய்து, எவ்வர்ணத்தா ரும் தத்தமக்குக் குறிப்பிட்ட தொழில்புரிந்து, ஜாதி, குல, ஆ சார, பழக்க வழக்கங்களுக்கு குந்தகம் நேரிடாவண்ணம், கடல் வழியாகவோ, தரைமார்க்கமாகவோ பொருள் வருவாய்க்கு உற்ற விடமடைந்து, பொருள் ஸம்பாதித்து, புண்யஞ்செய்து இம்மை மறுமைப்பயன் யாவும் கைகூடுமாறு முயலுவார்களாக. இக்காலத்தில் சொற்ப செல்வமுள்ளவனுக்கும் செருக்குக் கணக் கிலாது துன்பததை விளைவிக்கின்றது. செருக்கில்லாச் செல் வனைக் காண்பதறிது; கல்விச் செருக்கும் செல்வச் செருக்கும் ஸமமே.

कोऽर्थान्प्राप्य न गर्वितो विषयिणः कस्यापदोऽस्तंगताः ?
स्त्रीभिः कस्य न खण्डितं भुवि मनः ? को नाम राज्ञां प्रियः ? ।
कः कालस्य न गोचरान्तरगतः ? कोऽर्थी गतो गौरवम् ?
को वा दुर्जनवागुरासु पतितः क्षेमेण यातः पुमान् ? ॥

பணத்தைத்திரட்டிய எவன் இவ்வுலகில் கெர்வமடையாதவன் இல்லறப்பற்று மேலிட்ட எவனுக்குத் தீங்குகள் நீங்கின? மாதர் களால் எவன் மனதுதான் இப்பாரினில் கண்டிக்கப்படவில்லை? யாசகன் எவன் மேன்மையடைந்தான்? தீயவர் வலையில் சிக்கிய எவன்தான் க்ஷேமமாகச் சென்றான்? என்று பண்டைகாலத்து நீதிநிபுணர் ஒருவர் வினவுகின்றார். இன்பத்திற்கும் துன்பத்திற் கும் பணமே காரணம்; அதைக் கொஞ்சங்கொஞ்சமாக சேகரிக்க வேண்டுமாம்.

क्षणशः कणशश्चैव विद्यामर्थं च साधयेत् ।

கல்வியையும் செல்வத்தையும் சிறிது சிறிதாகவும், [கண்மூடித் திறக்கும் காலவளவு, நிமிஷந்தோறும் ஆர்ஜனஞ்செய்ய வேண்டு மென்பது ஆன்றோர் வாக்யம். திரவியத்தைச்சம்பாதிப்பதிலுள்ள சிரமங்களுக்கோர் அளவேகிடையாது. கைக்கெட்டிய பொருள் தன் பிரயோஜனத்திற்கு உபயோகப்படாது, தவறிவிடின் அதை விடத்துன்பம் மிகுதியாகத் தோன்றும். எந்த நிலைமையிலும் பணம் மிக வருத்தத்திற்கே காரணம், பிறர் பணத்தைக் கெட்ட வுபாயத்தால் பறிமுதல் செய்யவிரும்பாதே, நியாயமாக ஸம்பா திக்க முயலு, நியாயமாகச் சேகரித்தபணமே தன்னைக்காக்கும்; அதனால் அருந்தும் அன்னமும் ஜீரணமாகி தேஹத்தைப் போ ஷிக்கும். அநியாயமாகக் கிட்டிய பொருளால் பணக்காரன் ஆகுதல் ஸாத்யமில்லை; வேடர் முதலானோரிடம் பணம் நிலைத்தி ராதபடி ஸ்ரீ வால்மீகிமஹரிஷிசாபம் கொடுத்திருப்பதாக ஸ்ரீலலி தோபாக்யானத்தில் ஆதியில் போதிக்கப்பட்டிருக்கிறது. ஆகை யால் திரவியத்தை நியாயவழியில் ஸம்பாதித்து, அதன் வாயி லாக இயன்ற தானதர்மஞ் செய்து, எவ்வுலகிலும், கமழும் புண் யஞ் சம்பாதித்து, பேரானந்த மடைவோமாக, ஸகல கலாவல்ல பரான, ஷண்முகஸோதரரான, ஸ்ரீ தர்ம சாஸ்தாவென்றும், ஆர்யரென்றும், சிலவிடங்களில் 'அய்யனூர்' என்றும போற்றப் படும் ஸ்ரீஹரி ஹர புத்திரரை யாம் அநுதினமும் போற்று கின் றோம்.

சுபம்

கே. எ. இராமலிங்கசாஸ்திரியள்,
'ஸம்ஸ்கிருத காமதேனு' பத்திராதிபர்,
கல்லிடைக்குறிச்சி

ஸரஸ்வதிமாலா.

உலகத்தின் பலபாகங்களிலும் புத்தகசாலை இயக்கந்தோன்று முன் இந்தியாவில் "ஸரஸ்வதி பூஜை" என்ற அரிய திருவிழாக் கொண்டாடப்பட்டு வருவதை நோக்கும்பொழுது கல்வி இயக்கத்திற்கு மூலதேசம் எது என்பது புலப்படும். பண்டை இந்தியாவில் புத்தகசாலையியக்கம் எவ்வளவு தூரம் வலுத்திருந்தது என்பதை சரித்திர ஆசிரியர்களும் கொண்டாடுகின்றனர். காச்மீரம் நேபாளம் பரோடா முதலிய தேசங்களில் புஸ்தகசாலையியக்கம் தினந்தோறும் விருத்தியாகிவருகின்றது. எக்காரணத்தாலோ நேபாளத்தில் மந்திரியாயிருந்த ஒரு கனவான் சில வருஷங்களுக்கு முன் பல்லாயிரக்கணக்கான ஏட்டுப்புத்தகங்களை இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் ம்யூஸியத்திற்கு அளித்து விட்டார். அந்த ஸம்பவத்தைப் பல இந்திய மேதாவிகளும் கண்டித்தனர். அப்பால் சில சுதேசசமஸ்தானங்கள் தம்மிடத்துள்ள பிராசீன ஸம்ஸ்கிருத நூல்களை அச்சிட்டு வெளியிடுவதில் சிரத்தையோடு முன்வந்ததையும் குறிப்பிடவேண்டும். மைசூர், பரோடா, திருவிதாங்கூர், ஜம்மு, முதலிய சுதேச சமஸ்தானங்களிலிருந்து வரிசை வரிசையாகப் பல அபூர்வ க்ரந்தங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

தென் இந்தியாவில் 'காலஞ் சென்ற தஞ்சை சமஸ்தான' அரசர் புஸ்தகசாலையியக்கத்தில் கவனம் செலுத்தியது போல் வேறு எவரும் செய்யவில்லை. உலகத்திலேயே அதொரு சிறந்த புத்தகசாலை என்ற புகழையும் தனக்கு உரிமையாகக் கொண்டது.

ஆனால், 'தோலிருக்க சுளை விழுங்கி' என்ற கதையாக அப்புத்தகசாலையின் லிஸ்டில் காண்கிற புத்தகங்கள் முழுதும் இப்பொழுது காணப்படவில்லை எனவுந் தெரிகின்றது. ஜெர்மனி இங்கிலாந்து, அமெரிக்கா, முதலியவெளிநாடுகளிலிருந்து வெளிப்படுகின்ற பல வைதிக லௌகிக புஸ்தகங்களிலும் தஞ்சை ஸரஸ்வதீ மஹாலின் உதவி பாராட்டப்பட்டுள்ளது. இதன்புத்தகங்கள்

வெளிநாட்டுக்கலைஞராலும் கண்டு கையாளப்பட்டுள்ளன வென்று புலப்பட வில்லையா? நமக்குக்கிடைத்த பழைய பத்திரிகை யொன்றில் அடியில் கண்ட விபரம் காணப்படுகின்றது.

அதிசயமான கலைகள்.

ஹைதராபாத் ஸமஸ்தானத்திலுள்ள 'பாத்திக்காட்டி' என்ற இடத்தில் நிஜாம் ராஜ்யத்தில் உத்தியோகம் செய்யும் ஜாகீர்தார் டாக்டர் சைய்யது முகம்மது காசிம் இடத்தில் ஒரு அரிய பெரிய புத்தகசாலை இருக்கின்றதென்று ஒரு நிருபர் ஹிந்து வில் [26-3-23] ல் எழுதியிருக்கின்றார். இந்த புஸ்தகசாலை மிகவும் பழமையானது, அதில் அச்சுப் புத்தகமாகவும் கையெழுத்துப் பிரதியாகவும் ஓலைச்சுவடியாகவும் எண்ணிறந்த நூல்கள் பல பாஷைகளிலும் இருக்கின்றனவாம். சில நூல்கள் வேதகாலத்தைச் சேர்ந்தனவாம்.

1. தைலப் பிரயோகம்.

எகிப்து நாட்டில் செய்வது போல இறந்துபோனவர்களின் ப்ரேதங்களை தைலப்பிரயோகஞ் செய்து ஆயிரக்கணக்கான வர்ஷங்கள் கெடாமல் வைத்திருத்தல்.

2. கம்பியில்லாத் தந்தி.

இரண்டு கற்களைக் குறிப்பிட்ட முறையில் நட்டு ஆயிரக்கணக்கான மைல்தூரம் வரை செய்தி போக்குவரவு நடத்தல்.

பல நிறப்பருத்தி

வெள்ளை கருப்பு, மஞ்சள் முதலிய பல நிறமுள்ள பருத்திகளைப் பயிரிடுதல்.

4. அதிசயமான கண்ணாடி

கடலுக்குள்ளிருக்கும் வஸ்துக்களை கடல் மேல் வைத்துக் காணக்கூடிய அதிசயமான கண்ணாடி செய்யும் வித்தை.

5. பூ தத்துவம்

பூமிக்குள்ளேயுள்ள யந்திரங்கள், பாறைகள், புதையல்கள் உலோகங்கள், புதைந்து கிடக்கும் பழைய நகரங்கள் முதலியவற்றைக்கண்டு பிடிக்கும் விதம்.

6. பனியைத் தடுத்தல் முதலியன

உஷ்ணதேசங்களில் பனிவிழுமாறும் குளிர்ந்த தேசங்களில் பனிநிற்குமாறும் செய்யும் வித்தை, மலைகளை நிலமட்டமாக்கும் வித்தை, இரும்பை உறுக்கல்

7. ப்ரக்ருதஜயம்

மாதக்கணக்காக ஆஹாரமின்றிஉபவாஸமிருத்தல், குண்டோதரன்போல் சாப்பிடுதல்பழைய நூல்களைப்படித்து அதன்உட்பொருள்களை அறிதல், கற்கள் இரும்புமுதலியவற்றை எளிய முறையில் மெதுவுபடுத்தல் முதலிய பலவித்யைகளையும் பற்றி அப்புத்தகசாலையில் பலநூல்கள் இருக்கின்றனவாம.

8. நாணயங்கள்

பொன் வெள்ளி செம்பு முதலிய சரித்ர சம்பந்தமான புராதன நாணயங்களும், பல நிறக்கற்களும் அங்கே சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஷை வைத்யரால 40 பாஷைகளில் தயார் செய்யப்பட்டு நிஜாம் அரசருக்கு ஸமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள வைத்ய அகராதியொன்றும் இந்தப் புத்தகசாலையில் இருக்கிறது.

9. தாதுவாதம்

மலைகளை நில மட்ட மாக்கும் விதலை, இரும்பை உருக்கல், தண்ணீரை ஆயிரக்கணக்கான வருஷம் வெந்நீராக வைத்திருத்தல், தாழ்ந்த லோஹங்களைப்பொன் வெள்ளியாக்குதல் ரத்தினங்களையும் முத்தையும் உருக்கி விரும்பிய உருவமும் நிறமும் அளிதல்.

10. சிரஞ்சீவித்வம்

ஆயிரக்கணக்கான வருஷம் சாவாமல் நீண்ட ஆயுளோடு இருத்தல், தானியங்களை ஆயிரக்கணக்கான வருஷங்கள் பதப் படுத்தி வைத்திருத்தல், மாதக்கணக்காக ஆகாரமின்றி உபவாசம் இருத்தல். முதலிய பலவிஷயங்களடங்கிய இந்தப்புஸ்தகசாலையிலுள்ளநூல்களை உலகத்திற்கு பயன்படும் வண்ணம் செய்யக் கூடுமானால் உலகவாழ்க்கையில்நாம் கருதுமாறு புதியதோர் ஸித்தி கிடைக்கப்பெறுவோம் என்பதில ஐயமில்லை.

லோகோபகாரி என்னும் பத்திரிகையில் [5-4-24] இவ் விஷயம் வெளியாயிற்று. அமெரிக்காவிலுள்ள சில இங்கிலீஷ் பத்திரிகைகளும் இப்புத்தகசாலையே இன்று உலகத்தில் பெரிய புத்தகசாலை என்று பல கருத்துகள் வெளியிட்டன.

முதலாவது பாரரவைப் படிக்கும் பொழுது தசரதாது சரீரத்திற்குச் செய்த தைலப் பிரயோகததைப் பற்றி ஸ்ரீ வால்மீகி மஹர்ஷி தெரிவிப்பது நம் ஞாபகத்திற்கு வரலாம்.

கம்பியில்லாத்தந்தியை நினைக்கும்பொழுது श्रोत्राकाशसंयमं என்ற முறையில் ஸ்ரீபதஞ்சலிபகவான் அறிவிக்கின்ற தூரச்ரவணம் நம்முடைய மனத்தைக் கவர்கின்றது.

பருத்திகளைப் பல நிறமுள்ளனவாக மாற்றும் முறையை ஸ்ரீ வராகமிஹிராசார்யர் ப்ருஹத்ஸம்ஹிதையில் பார்த்து நாம் நலம்பெறலாம்.

மறைவுமை [அத்ருச்யாஞ்சனம்] என்ற சொல்லும், அத்ருச்யகரணீ என்ற வித்யையும் இந்தியாவில் இல்லாததல்ல. நிதிதர்சனத்யாயத்தையும் அஞ்சனசாஸ்திரம் என்ற மலையாள புஸ்தகத்தையும் ஸித்தநாகார்ஜுநகச்சபுடத்தையும் படிப்போர் அதிசயமான கண்ணாடியைக் கண்டுபிடிக்கலாம்.

பூமிக்குள் சுரங்கந்தோண்டி அரசாங்கத்தின் பொருள் வருவாயை மிகுதிப்படுத்தும் வழிதெரிவித்த சாணக்ய அர்த்த

சாஸ்த்ரம் சுக்ரநீதி முதலியவற்றைப் பெற்ற இந்நாட்டில் பாதாளாஞ்சனம், நித்யஞ்சனம் முதலியனவும் அபூர்வமன்று.

இப்பொழுதும் ஹிமயமலையின் உயர்ந்த கொடிமுடியாகிய எவரஸ்டின் [கௌரீசங்கரத்தின்] மீது ஏற முயன்ற மேனாட்டினர் கூடி 20000 அடியுயரத்தில் இந்திய முனிவர்களும் அவர்களின் தர்மபத்நிகளும் 700 750 பேர் வரைக்காணப்பட்டதாகத் தெரிவிக்கும் பொழுது சீதோஷ்ணங்களை ஜெயித்து வாழும் முறை மறையவில்லையென்று தெரிகின்றதல்லவா!

ஸஞ்ஜீவிநீ, விசல்யகரணீ முதலிய மஹாமூலிகைகள் ராமாயணத்தில் புகழப்பட்டுள்ளன. அவைகளை நாம் மறந்து போகலாமா.

ஹேமவித்தை முதலியன 64கலைகளில் உள்பட்டவைதான். சிரஜீவித்துவம் அளிக்கும் மூலிகைகளிலொன்றாகிய அஸல் ஸோமலதையின்பெருமையை சப்தகல்பத்ருமம் தெரிவிக்கின்றது. உண்மையான ஸோமலதையானது சுக்ல க்ருஷ்ண பக்ஷங்களில் முறையே வளர்ந்தும், குறைந்தும் காணும் என்ற லக்ஷணப்படி கொல்லங்கோடு ராஜா அவர்களிடம் இருப்பதாக அரிகின்றேன். அதன் சாரம்சரீரத்தில்பட்டால்பதினாயிர வருஷம் ஜீவிக்கலாமாம் மஹர்ஷிகள் அடைந்த இவ்விதப் பெருமைகளை நாம் மீண்டும் அடையவேண்டாமா! ஆங்கிலங்கற்று நமது வயிற்றை நிரப்பும் அற்ப உத்தேசந்தானா நமது ஜந்மஸங்கல்பம்.

ஒரு வேண்டுகோள்

இங்கு தெரிவித்த ஹைதராபாத்துப் புஸ்தகசாலையிலுள்ள நூல்களை நூற்றுக்கணக்கான பிராஹ்மணவித்வான்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்வித்து நமது ப்ராசீன [64] கலாவித்யைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து அவற்றில் காண்கிற அபூர்வ விஷயங்களைப் பல புஸ்தகங்களாக வெளியிடவேண்டும்.

தஞ்சாவூர் ஸரஸ்வதிமாலிலுள்ள ஏராளமான புஸ்தகங்களை யும் நகல் செய்து மேற்சொன்ன புஸ்தகங்களுடன் வெளியிட்டு வித்யாப்ரசாரத்தில் நாமே வழிகாட்ட வேண்டும். இவ்விதம் மஹத்தான வித்யாவிலாஸம் ஒன்று ஸ்ரீ ஜகத்குரு பீடத்தின் ஆதரவில் விளங்குமானல் அரியகலைகள் புத்துயிர்பெறும். லக்ஷக் கணக்கான கலாநிபுணர்கள் பிராஹ்மண ஜாதியின் பெருமைக்கு உறைவிடமாக விளங்குவார்கள்.

நான் முன்னொரு வியாஸத்தில் தெரிவித்தவாறு பிராஹ் மண ஸமூகத்தில் ஒரு மகமை வசூல்செய்து இந்தஸ்தாபனத்தை காவேரி நதி தீரத்தில் ஒரு ஏகாந்தமான ஆச்ரமத்தில் ஸ்ரீ பக வத் பாத அநுக்ரஹத்தை முன்னிட்டு ஏற்படுத்தலாம். நமது பெரியோர்கள் இவ்வாறுதான் செய்யவேண்டும் என்று ஸித்த ஸங்கல்பம் செய்தால் வெற்றி பெறலாம். தக்கார் முன் வந்து வேலை தொடங்கினல் இப்புண்ய பூமியிலுள்ள பிரபுக்களும் ஏழை களுங்கூட ஸஹாயஞ் செய்வார்கள்.

यान्ति न्यायप्रवृत्तस्य तिर्यञ्चोऽपि सहायताम् ।

என்றபடி உத்தமமான கார்யத்தைச் செய்யத்தொடங்கின் ஸ்ரீராம பிரானுக்கு அணில்களும் ஸேவை செய்ததுபோல் எளியவர்களும் நம்மை ஆதரிப்பார்கள். அரசாங்கமும் உதவி செய்யும். மஹான் களின் ஸங்கல்பத்திற்கு ஈசுவரனே ப்ரேரகனுயிருக்கும்போது அந்த கருணாநிதிவெளியுலகிலும் வேண்டிய உதவி செய்வதில் தடையென்ன.

कश्चिद्यतति सिद्धये ।

ஸ்ரீ ஜாநகீ ஜாநி:

அகில இந்திய ஹிந்து மஹாஸபை
'வைதிகப்ரதிநிதி தேவை'

இதுவரையில் நடந்துவந்த ஹிந்துமஹாஸபை சென்ற 2 வருஷங்களாக அதிக வளர்ச்சிகொண்டு, பிரபல ஸபையாக வந்திருக்கிறது. இதுகாறும் வைதிக ஸபையாக இருந்தது, இப்பொழுது லௌகிக ஸபையாக மாறிவிட்டது. இந்த விஷயத்தில் ஸந்தோஷிக்க வேண்டியதுதான் உலகமில்லாமல் வேதமில்லை. வேதமில்லாமல் உலகமில்லை வேதம் நிலைத்திருக்க உலகம் வேண்டும் உலகம் நிலைத்து க்ஷேமமாயிருக்க வேதம் வேண்டும். ஆதலால் வைதிக லௌகிக ஹிந்துமஹாஸபை அவசியம்தான் ஆனால் வைதிகமற்ற லௌகிக ஸபையும் வேண்டாம் லௌகிகமற்ற வைதிக ஸபையும் வேண்டாம் அவைகள் தனித்தனியே இருக்கத்தான் இருக்கும்.

தற்சமயம் அந்தஹிந்து ஸபையின் வைதிக பாகத்தில் தவறுதல் வந்துவிட்டதாக வைதிகர்களின் நினைப்பு முக்யமாய் தென்னிந்திய வைதிக ப்ராம்மணர்களின் முக்கிய நினைப்பு இதுவே உத்தம வேதபக்தரான, பிரும்மஸ்ரீ மதன 'மோஹன, மாளவைய்யாஜி, உத்தஆர்ய ஸமாஜ பக்தரான ஸ்வாமி சிரத்தாநந்தாஜியுடன் கலந்துகொண்டு, தீண்டாமை யொழித்தல், அன்னியரை மதத்துக்குள் ஸ்வீகரித்தல். என்ற இரண்டு பாகத்தையும் இந்த ஸபையில் சேர்த்து விட்டார். இதினாலேயே, வைதிகர்களுக்கு மஹாத்மா காந்திஜியின்பேரில் சாந்தமாக ஏற்பட்டகோபம் தர்மாத்மவான வையாஜியின்பேரில் கடுமையாய்ப் பாய்ந்து விட்டது ஆனால் காரணமில்லாமலில்லை.

(தொடரும்.)

ஸாரம் ரேங்காச்சாரியார்.